TNVR13000005
2011

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
முன்னிலை–திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ.,எல்எல்.எம்.,
சார்பு நீதிபதி
2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ம் நாள் திங்கட்கிழமை
**I.A.No.7/2023 in O.S.No.110/2011**

அப்துல்லா (மனநிலை சரியில்லாதவர்)(இறந்துவிட்டார்)
... 1 ம் வாதி

1. பாத்திமாபீவி
2. பேபி பரக்கத்பர்கானா ... மனுதாரர்கள் / 2,3 வாதிகள்

/எதிர்/

1. இப்ராம்அலி
2.முகமதுரபீக்
3. பல்கீஸ்பீவி (இறப்பு)
4. முகம்மது யூசுப்
5. பௌசி ... 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகள்
6. பரிதா
7. செய்யதுமசூது
8. சிக்கந்தர்பாதுஷா
9. சமினா
10. அனிசா ... 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் / சேர்க்கப்பட வேண்டிய 6 முதல் 10 பிரதிவாதிகள்

இம்மனு 30.10.2024 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் / வாதிகள்தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.பாலசுப்பிரமணியன், அவர்கள் ஆஜராகியும், 1, 6, 9, 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சோலைராஜ் அவர்கள் ஆஜராகியும், 2, 7, 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 4,5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றாத் தரப்பினர்களாகியும், இரு தரப்பு வாதம் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

6 முதல் 10 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 6 முதல் 10 பிரதிவாதிகளாக

சேர்த்துக் கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி சிபிசி ஆர்டர் 1 ரூல் 10(2) மற்றும் பிரிவு 151ன் படி மனுதாரர்கள் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்:–</u>

1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகள்மீது மனுதாரர்கள் பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். தாவாச் சொத்துக்கள் ஆதியில் 1ம் மனுதாரரின் மாமனார் லேட்.அப்துல்ரஜாக் என்பவருக்கு கடந்த 11.12.1974ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரப்படி கிரையப்பாத்தியமான சொத்தாகும். மேற்படி லேட்.அப்துல்ரஜாக் என்பவர் 1ம் பிரதிவாதிக்கு 09.03.2006ம் தேதி தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதாக 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் சொல்லியிருப்பது பொய்யானது மற்றும் மோசடியானது ஆகும். ஷை 09.03.2006 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரமானது, மேற்படி அப்துல்ரஜாக்கின் கையெழுத்தை போர்ஜரி செய்து, 1ம் பிரதிவாதியால் மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் ஆகும். அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி அவரது மனைவியும் சேர்க்கப்பட வேண்டிய 6ம் பிரதிவாதியுமான பரிதா என்பவருக்கு ரஜாக் காம்பவுண்டில் உள்ள தாவா 1 முதல் 15 லக்க சொத்துக்களில் கிழக்கு பகுதி வீடுகளை கடந்த 01.07.2008ம்தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி எழுதிக் கொடுத்துள்ளதாகவும், மேற்படி பரிதா என்பவர் சேர்க்கப்பட வேண்டிய 7ம் பிரதிவாதியான செய்யது மசூது என்பவருக்கு கடந்த 05.01.2010ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஜெனரல் பவர் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதாகவும், மேற்படி ஜெனரல் பவர் பத்திரத்தின் அடிப்படையில் செய்யது மசூது என்பவர் சேர்க்கப்பட வேண்டிய 8ம் பிரதிவாதியான சிக்கந்தர்பாதுஷாவிற்கு கடந்த 20.01.2011ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரப்படி கிரையம் கொடுத்துள்ளதாகவும் தெரிவித்து மேற்படி கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் சிக்கந்தர்பாஷா என்பவர் 1ம் மனுதாரர்மீது அருப்புக்கோட்டை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிராதில் கண்ட தாவா 13வது லக்க சொத்து சம்பந்தமாக ஆர்.சி.ஓ.பி.எண்.9/2012 என்ற வழக்கை

தாக்கல் செய்துள்ளார். தாவாச் சொத்துக்களில் 1ம் மனுதாரர் லேட்.அப்துல்ரஜாக்கின் மருமகள் என்ற அடிப்படையிலும், லேட்.அப்துல்லாவின் மனைவி என்ற அடிப்படையிலும் குடியிருந்துவரும் நிலையில், 1ம் மனுதாரர் தாவா சொத்தில் வாடகைக்கு குடியிருந்து வருவதாக பொய்யான விபரங்களைக் கூறி 1ம் மனுதாரர்மீது சேர்க்கப்படவேண்டிய 8ம் பிரதிவாதியான சிக்கந்தர் பாதுஷா என்பவர் அருப்புக்கோட்டை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்படி ஆர்.சி.ஓ.பி.எண்.9/2012 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி 1ம் பிரதிவாதி அவரது மனைவியான பரிதா என்பவருக்கு எழுதிக் கொடுத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரம் மோசடியானது. மேற்படி மோசடியான பத்திரத்தின் அடிப்படையில் பரிதா என்பவர் செய்யதுமசூது என்பவருக்கு எழுதிக் கொடுத்துள்ள ஜெனரல் பவர் பத்திரமும் மோசடியானது. மேற்படி மோசடியான பவர் பத்திரத்தின் அடிப்படையில் செய்யது மசூது என்பவர் பரிதாவின் பவர் ஏஜண்டாக இருந்து சிக்கந்தர்பாதுஷா என்பவருக்கு எழுதிக் கொடுத்துள்ள கிரையப்பத்திரமும் மோசடியான ஆவணங்கள் ஆகும். மேற்படி ஆவணங்கள் தாவாச் சொத்துக்களில் மனுதாரர்களுக்குரிய பங்கினை சட்டப்படி கட்டுப்படுத்தாது. மேற்படி ஆவணங்கள் சட்டப்படி இல்லா நிலை ஆவணங்கள் ஆகும்.

(ii) அதுபோல் தாவா வழக்கானது நிலுவையில் இருந்து வரும்போது, 1ம் பிரதிவாதி ரஜாக் காம்பவுண்டில் உள்ள தாவா 1 முதல் 15 லக்க சொத்து வீடுகளில் மேற்குபகுதி வீடுகளை அவரது மனைவியான பரிதா மற்றும் மகள்கள் சேர்க்கப்படவேண்டிய 9, 10 பிரதிவாதிகளான சமினா மற்றும் அனிசா ஆகியோர்களுக்கு கடந்த 01.03.2023ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரமும் மோசடியானதாகும். ஷை தானசெட்டில்–மெண்ட் பத்திரம் தாவா சொத்துக்களில் மனுதாரர்களுக்குரிய பங்கினை சட்டப்படி கட்டுப்படுத்தாது. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரமும் சட்டப்படி இல்லாநிலை ஆவணங்கள் ஆகும். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோது 1ம் பிரதிவாதி அவரது மனைவி மற்றும் மகள்களுக்கு ஷை தானசெட்டில்மெண்ட் பத்திரங்களை மோசடியாக எழுதிக் கொடுத்துள்ளார். தாவா வழக்கும் பாகப்பிரிவினை வழக்காக உள்ளதாலும், வழக்கு நிலுவையில் உள்ளபோது மேற்படி 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள்

மோசடியாக பத்திரங்களை ஏற்படுத்தியுள்ள காரணத்தினாலும் மேற்படி 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் ஆவார்கள். எனவே மேற்படி 6 முதல் 10 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் 6 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்த்துக் கொண்டு வைஷ வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

3. <u>6ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 9, 10 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மறுப்புரையின் சுருக்கம்:</u>–

மனு சட்டப்படி செல்லாது. இவ்வழக்கில் 6ம் எதிர்மனுதாரரின் கணவர் 01.07.2008ம் தேதி வழக்கிற்கு முன்பே 1 முதல் 15 லக்கங்களில் கிழக்கு பகுதி வீடுகளை தானப்பத்திரமாக 6ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார். மேற்படி தானப்பத்திரம் வழக்கிற்கு முன்பே ஏற்பட்டது. இந்த விபரம் வாதிகளுக்கு தெரிந்திருந்தும் கடந்த 12 ஆண்டுகளாக 6ம் எதிர்மனுதாரரை வழக்கில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. வழக்கிற்கு முன்பே மேற்படி தானப்பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டுவிட்டதால், வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலேயே 6ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும். சிக்கந்தர் பாதுஷா என்பவர் வாடகை கட்டுப்பாட்டு சட்டப்படி தாக்கல் செய்த மனுவில் 6ம் எதிர்மனுதாரரை ஒரு சாட்சியாக விசாரித்தார்கள். 6ம் எதிர்மனுதாரரின் கணவர், 6ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த தானப்பத்திரம் மோசடியானது என்று கூறுவது சுத்தப்பொய். 6ம் எதிர்மனுதாரரின் கணவருக்கு, 6ம் எதிர்மனுதாரரின் மாமனார் உயிருடன் இருக்கும்போதே, 15.03.1996ம் தேதி ஹிபா எனும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி அதற்கு ஆதரவாக 16.03.1996ம் தேதி மதுரையில் உள்ள நோட்டரி பப்ளிக் முன்பு கையெழுத்திட்டு சாட்சிகள் முன்னிலையிலும் கையெழுத்திட்டு ஆதரவு செய்து கொடுத்திருக்கிறார். அதன்பின்பு 28.08.2003ம் தேதி 6ம் எதிர்மனுதாரரின் மாமனார், 6ம் எதிர்மனுதாரரின் கணவருக்கு நல்ல மனநிலையில் பிறர்தூண்டுதுலின்றி பதிவு செய்த உயில் சாசனம்மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்திருந்தார். அந்த உயில் 6ம் எதிர்மனுதாரரின் மாமனார் இறந்தபிறகு ஊர்ஜிதத்திற்கு வந்திருக்கிறது. 6ம் எதிர்மனுதாரரின் மாமனார் வாங்கிய கிரையப்பத்திரங்கள் அனைத்தும் 6ம்

எதிர்மனுதாரரின் கணவரிடம்தான் இருக்கிறது. மேலும் 6ம் எதிர்மனுதாரரின் மாமனார் 09.03.2008ம் தேதியிட்ட பதிவு செய்த தானப்பத்திரம்மூலம் கதவு எண்கள் 14, 14(1), 14(2) முதல் 14(11) வரையிலும் மற்றும் 14 ஏ, 14 பி புது வார்டு எண் 6ல் உள்ள வீடுகள் அனைத்தையும் 6ம் எதிர்மனுதாரரின் கணவருக்கு தன்னிச்சையாக பாத்தியப்படுத்தி, 6ம் எதிர்மனுதாரரின் கணவரும் அதை ஒப்புக்கொண்டு அனுபவித்து வந்தார். எந்தவகையிலும் ஆதிசுவான்தாரரான 6ம் எதிர்மனுதாரரின் மாமனார் அப்துல்ரஜாக் அவர்கள் இந்த சொத்தை 6ம் எதிர்மனுதாரரின் கணவருக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டதால், மனுதாரருக்கு எந்தவித பாகமும் கிடைக்கக்கூடியதில்லை. இந்த வழக்கு 12 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருக்கிறது. வாதி வேண்டுமென்றே இந்த வழக்கில் பல வாய்தாக்கள் வாங்கி இந்தஎதிர்மனுதாரர்களை வீண்அலைக்கழிவு செய்கிறார். எனவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. <u>7, 8ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மறுப்புரையின் சுருக்கம்:</u>–

(i) மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானது மற்றும் அவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். ஆதியில் தாவாச் சொத்துக்கள் அப்துல்ரஜாக் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சங்கதி ஒப்புக்கொள்ளப்படுகிறது. மேற்படி அப்துல் ரஜாக் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் அப்துல்ரஜாக்கின் கையெழுத்தை போர்ஜரி செய்து 1ம் பிரதிவாதியால் மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்று கூறியுள்ள சங்கதி மறுக்கப்படுகிறது. 01.07.2008 தேதியில் 1ம் பிரதிவாதி அவரது மனைவியான 6ம் எதிர்மனுதாரர் பரிதாவிற்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ள சங்கதியும், அதனைத் தொடர்ந்து 6ம் எதிர்மனுதாரர் 7ம் எதிர்மனுதாரர் செய்யதுமசூது என்பவருக்கு 05.01.2010 தேதியில் பவர் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதும் மேற்படி பவர் பத்திரத்தின் அடிப்படையில் 7ம் எதிர்மனுதாரர் 1 முதல் 15 அயிட்ட சொத்துக்களை 20.01.2011 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின்மூலம் 8ம் எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்துள்ள சங்கதியும் உண்மையாகும். 8ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரர்மீது அருப்புக்கோட்டை

வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் ஆர்.சி.ஓ.பி.எண்.9/2012 என்ற எண்ணில் மனுத்தாக்கல் செய்துள்ளார். 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் மோசடி ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும், 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்று கூறியுள்ள சங்கதிகளும் மறுக்கப்படுகின்றன.

(ii) உண்மையில் 1 முதல் 15 அயிட்ட சொத்துக்களின் கிழக்குப் பகுதியானது ஆதியில் 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரான அப்துல் ரசாக் என்பவருக்கு 11.12.1974 தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலம் கிரைய பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி சொத்துக்களை அப்துல்ரஜாக் 09.03.2006 தேதியிட்ட இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்து, மேற்படி இனாம் செட்டில்மெண்ட்டை 1ம்எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்டு மேற்படி சொத்துக்களை அனுபவித்து வந்து, மேற்படி சொத்துக்களை தனது மனைவியான 6ம் எதிர்மனுதாரர் பரிதாவிற்கு 01.07.2008 தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார். மேற்படி இனாம் செட்டில்மெண்ட்டை ஏற்றுக் கொண்ட 6ம் எதிர்மனுதாரர் மேற்படி சொத்துக்களின் உரிமை மற்றும் அனுபவத்தைப் பெற்று, மேற்படி சொத்துக்களைப் பொறுத்து 7ம் எதிர்மனுதாரருக்கு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்து, மேற்படி பவர் பத்திரத்தின்மூலம் 7ம் எதிர்மனுதாரர் மேற்படி சொத்துக்களை 8ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். 8ம் எதிர்மனுதாரர் மேற்படி சொத்துக்களை கிரையம் பெற்ற பின்பு, மேற்படி சொத்துக்களில் வாடகைதாரர்களாக இருந்தவர்கள் 8ம் எதிர்மனுதாரருக்கு வாடகை கொடுக்க மறுத்து வந்ததால், 8ம் எதிர்மனுதாரர் மேற்படி வீடுகளில் குடியிருந்து வந்த நபர்கள்மீது அருப்புக்கோட்டை வாடகைக் கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் ஆர்.சி.ஓ.பி.எண்.7/2012, 8/2012 மற்றும் 9/2012 வழக்குகளை தாக்கல் செய்து, 1ம் மனுதாரரை தவிர மற்ற வாடகைதாரர்கள் மேற்படி சொத்துக்களிலிருந்து நீதிமன்ற உத்தரவின்மூலம் வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்நிலையில், அருப்புக்கோட்டை வாடகைக் கட்டுப்பாட்டு நீதிமன்றம் எவ்வித சரியான காரணமும் இல்லாமல் ஆர்.சி.ஓ.பி.எண்.9/2012 மனுவினை தள்ளுபடி செய்ததால், 8ம் எதிர்மனுதாரர் மேற்படி தள்ளுபடியான உத்தரவின்மீது அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார். 2012ம் வருடம் வாடகைக்

கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தபின்புதான், மனுதாரர் இம்மனுவின் எதிர்மனுதாரர்களை மோசம் செய்ய வேண்டி உள்நோக்கத்துடன் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாக 8ம் எதிர்மனுதாரருக்கு தெரிய வந்தது. 8ம் எதிர்மனுதாரர் மேற்படி சொத்துக்களை நல்லெண்ண கிரைய தாரராக சரியான பிரதிபிரயோசனத்திற்கு கிரையம் பெற்றுள்ளார். 8ம் எதிர்மனுதாரரின் கிரையமானது 2011ம் ஆண்டு ஏற்பட்டு, 2012ம் ஆண்டு 8ம் எதிர்மனுதாரர் வாடகைக் கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், 8ம் எதிர்மனுதாரரின் கிரையம் பற்றி 2011ம் ஆண்டே தெரிந்து கொண்டு உரிய காலத்தில் ஆட்சேபணை செய்யாமல், கிரையம் ஏற்பட்ட 12 ஆண்டுகள் கழித்து மிகவும் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே அசல் வழக்கானது எவ்விதத்திலும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

5. மனுதாரர்களின் மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே இம்மனுவில் தீர்வுக்குரிய சங்கதி ஆகும்.

**6**. வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம்கோரி மனுதாரர்கள் / வாதிகளால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக நிலுவையில் உள்ளதாக தெரிய வருகிறது. இந்நிலையில், 1ம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் அப்துல்ரஜாக் 09.03.2006 அன்று தாவாச் சொத்துக்களைப் பொறுத்து தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளதாக, 1ம் பிரதிவாதியால் மோசடியாக உருவாக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில், 1ம் பிரதிவாதி 01.07.2008 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி தனது மனைவியான 6ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், 6ம் எதிர்மனுதாரர் மேற்படி சொத்துக்களை மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் அடைந்து, 7ம் எதிர்மனுதாரருக்கு 05.01.2010 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஜெனரல் பவர் பத்திரம் எழுதிக் கொடுத்து, 7ம் எதிர்மனுதாரர் மேற்படி ஜெனரல் பவர் பத்திரத்தின் அடிப்படையில் 8ம்

எதிர்மனுதாரருக்கு 20.01.2011 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம்மூலம் கிரையம் கொடுத்துள்ளதாகவும், மேலும் 1ம் பிரதிவாதி தாவாச் சொத்துக்களில் ஒரு பகுதியை தனது மகள்களான 9, 10 எதிர்மனுதாரர்களுக்கும் 01.03.2023 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்துள்ளதாகவும், தாவாச் சொத்துக்களைப் பொறுத்து 1ம் பிரதிவாதி 6, 9, 10 எதிர்மனுதாரர்களுக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரமும், 6ம் எதிர்மனுதாரர் 7ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த பவர் பத்திரமும், 7ம் எதிர்மனுதாரர் 8ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரங்களும் சட்டப்படி செல்லத்தக்க ஆவணங்கள் கிடையாது எனவும், மேற்படி ஆவணங்கள் இந்த மனுதாரர்கள் /வாதிகளை கட்டுப்படுத்தாது எனவும், எனவே மேற்படி 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள்மீது வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து மோசடி ஆவணங்கள் ஏற்பட்டுள்ளதால் 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் எனவும் மனுதாரர்கள் / வாதிகளால் கூறப்பட்டுள்ளது.

7. ஆனால், 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே தாவாச் சொத்துக்களைப் பொறுத்து, 15.03.1996ம் தேதி ஹிபா என்னும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்து, அதன்பின்பு 28.08.2003ம்தேதி ஒரு உயில் சாசனமும் எழுதிக் கொடுத்து, அதன்பின்னிட்டு 09.03.2006 தேதியில் ஒரு தானப்பத்திரமும் எழுதிக் கொடுத்து, தாவாச் சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், அவ்வாறு 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் தாவா 1 முதல் 15 லக்க சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரர் 6ம் எதிர்மனுதாரருக்கு 01.07.2008 தேதியிலேயே தானப்பத்திரம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்து விட்டதாகவும், மேற்படி தானப்பத்திரம் வழக்கிற்கு முன்பே ஏற்பட்டதாகவும், இந்த விபரம் வாதிகளுக்கு தெரிந்திருந்தும் கடந்த 12 ஆண்டுகளாக 6ம் எதிர்மனுதாரரை வழக்கில் சேர்க்க நடவடிக்கை எடுக்காமல் காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும் 1, 6, 9, 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. 2, 7, 8 எதிர்மனுதாரர்கள் தரப்பிலும், 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் 1ம் எதிர்மனுதாரருக்கு வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து தானசெட்டில்–

மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளதன் அடிப்படையிலேயே, 1ம் எதிர்மனுதாரர் தாவாச் சொத்துக்களை 6ம் எதிர்மனுதாரருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ள–தாகவும், மேற்படி தான செட்டில்மெண்ட் அடிப்படையிலேயே 6ம் எதிர்மனுதாரர் 7ம் எதிர்மனுதாரருக்கு பவர் பத்திரமும், 7ம் எதிர்மனுதாரர் 8ம் எதிர்மனுதாரருக்கு கிரையப்பத்திரமும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், 8ம் எதிர்மனுதாரர் பெற்ற கிரையம் நல்லெண்ணத்தின் அடிப்படையில் சரியான பிரதிபிரயோஜனத்திற்கு பெற்ற கிரையம் எனவும், 2011ம் ஆண்டு 8ம் எதிர்மனுதாரர் பெற்ற கிரையம் பற்றி தெரிந்திருந்தும் மனுதாரர்கள் அந்த காலகட்டத்திலேயே 8ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுக்காமல் தற்போது 12 ஆண்டுக்கும் மேலான காலத்தில் மிகவும் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனு காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

8. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிற்கு தேவையற்ற நபர்கள் என்று எதுவும் கூறாமல் காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றே ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. தாவாச் சொத்துக்களைப் பொறுத்து 6, 9, 10 எதிர்மனுதாரர்கள் பெயரில் தானசெட்டில்–மெண்ட் பத்திரமும், 7ம் எதிர்மனுதாரர் பெயரில் ஜெனரல் பவர் பத்திரமும், 8ம் எதிர்மனுதாரர் பெயரில் கிரையப்பத்திரமும் ஏற்பட்டுள்ளதாக 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், மேற்படி 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிற்கு தேவையான என்பதால் அவர்களை அசல் வழக்கில் கட்சியாக சேர்ப்பது அவசியமானது என்று இந்நீதிமன்றம் காண்கிறது.

9. மேலும், சேர்க்கப்படவேண்டிய 6, 9, 10 எதிர்மனுதாரர்களுக்கு 1ம் எதிர்மனுதாரர் தாவாச் சொத்துக்களைப் பொறுத்து தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ள நிலையிலும், 6ம் எதிர்மனுதாரர் 7ம் எதிர்மனுதாரருக்கு ஜெனரல் பவர் பத்திரமும், 7ம் எதிர்மனுதாரர் 8ம் எதிர்மனுதாரருக்கு கிரையப்பத்திரமும் எழுதிக் கொடுத்துள்ள நிலையில், அசல் வழக்கிற்கு 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் அவசியமான தரப்பினர்கள் என்றும், தாவாச் சொத்துக்கள் சம்பந்தமாக வில்லங்க பாராதீனம் செய்துள்ள அனைத்து நபர்களையும் கட்சி சேர்த்து அவர்களையும்

உள்ளடக்கி அசல் வழக்கில் தீர்வு காண்பதுதான் முறையானது என்றும் இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டிருந்தாலும், 8ம் எதிர்மனுதாரர் ஏற்கனவே ஒரு ஆர்.சி.ஓ.பி. வழக்கை தனியாக நடத்தி வருவதும், அதேபோல இதர ஆவணங்கள் 9, 10 எதிர்மனுதாரர்கள் பெயரில் 2023 வருடத்தில்தான் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிய வருகிறது. அசல் வழக்கில் நாளது தேதிவரை விசாரணை ஆரம்பிக்கப்படாமல் பல்வேறு இடைக்கால மனுக்களின் அடிப்படையில் காலதாமத–மாகியுள்ள சூழ்நிலையில் எதிர்மனுதாரர்கள் சுட்டிக்காட்டும் காலதாமதமானது அவசியமற்றது என இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. எனவே மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும் மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டும், 6 முதல் 10 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் 6 முதல் 10 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்த பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

J SELVAN JESU RAJA
Digitally signed by J SELVAN JESU RAJA

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>: இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>: இல்லை

J SELVAN JESU RAJA
Digitally signed by J SELVAN JESU RAJA

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
I.A.No.7/2023 in OS.No.110/2011
உத்தரவு நாள் – 11.11.2024